# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone: 044–2838 9038; email: registrar@tnteu.ac.in; Website: www.tnteu.ac.in


**Lr. No.TNTEU/R/Elig./B.Ed Admission 2018-19/253** **Date: 14.09.2018**

முனைவர் நா.ரவீந்திரநாத் தாகூர், Ph.D
பதிவாளர்(பொ)

பெறுநர்
முதல்வர்கள்,
இப்பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்து சுயநிதி கல்வியியல் கல்லூரிகள்.

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** கல்வி ஆண்டு 2018-2019 — பல்கலைக்கழக இணைவு பெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் - பி.எட் சேர்க்கை - அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்பு நாள் அன்று சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் - நினைவூட்டல் - தொடர்பாக.

பார்வை: இப்பல்கலைக்கழக கடித எண்கள்:TNTEU/R/Elig./B.Ed Admission 2018-19, நாள் 05.09.2018 மற்றும் 12.09.2018.

-------

பார்வையில் கண்ட இப்பல்கலைக்கழகக் கடிதங்களின் வாயிலாக, ஏற்கெனவே தெரிவித்துள்ளவாறு, அனைத்து சுயநிதி கல்வியியல் கல்லூரிகளும், பல்கலைக்கழகத்தில் அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்பு நாள் அன்று, கீழ்க்கண்ட ஆவணங்களை அவசியம் சமர்ப்பிக்கவேண்டும் என நினைவூட்டப்படுகிறது.

1. சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களது தகுதிக்கட்டணம் (eligibility fee), 10.09.2018 அல்லது அதற்கு முந்தைய தேதிகளில் ஒரே வங்கி வரைவோலையாக எடுத்து, அதன் பின்புறம் கல்லூரி எண் மற்றும் மாணவர்களது மொத்த எண்ணிக்கையை குறிக்கவும்.
2. மாணவர்கள் பூர்த்தி செய்து, சேர்க்கைக் குழுவால் மாணவர்களின் கல்வித் தகுதி சரிபார்க்கப்பட்டு, முதல்வர் கையொப்பமிட்ட விண்ணப்பங்கள் ஒவ்வொன்றுடனும், முதல்வர் சான்றொப்பமிட்ட கல்வி, மாற்றுச்சான்றிதழ், சாதிச்சான்றிதழ், ஆதார் அட்டையின் நகல்களை இணைக்கவும்.
3. சேர்க்கை செய்யப்பட்ட அனைத்துத் தகுதியான மாணவர்களின்(qualified students) அசல் (original) கல்விச் சான்றிதழ்கள், சாதிச்சான்றிதழ்கள்.
4. மாணவர்களது விவரங்கள் பதிவேற்றம் செய்து, பின் இணையதளத்திலிருந்து ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியே பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் (Individual online Admission Application Printouts)
5. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர்கள் சேர்க்கைப் பட்டியல் (Form-A)
6. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர்கள் தகுதிப் பட்டியல் (Form-B)
7. NCTE Regulation-2014 விதியின்படி அண்மையில் NCTE வழங்கிய அங்கீகார (Recognition) ஆணையின் நகல்.
8. கடைசியாக பல்கலைக்கழகத்திலிருந்து பெற்ற இணைவு / தொடர் இணைவு (Provisional / Continuation of Provisional Affiliation) ஆணையின் நகல்கள்.
9. NCTE ஒப்புதல் அளித்த மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தகுதி வாய்ந்த ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழகம் வழங்கிய தகுதி ஒப்புதல் (Staff approval order) ஆணையின் நகல்.

மேலும், அசல் சான்றிதழ் சரிபார்ப்புப் பணி விரைவாக முடிக்க ஏதுவாக, ஒவ்வொரு மாணவனின் அசல் சான்றிதழ்களை – Community certificate, X-Mark sheet, +2 Mark sheet, UG degree/provisional, UG consolidated mark sheet, PG degree/provisional, PG consolidated mark sheet – என்ற வரிசையில் அடுக்கித் தயாராக வைத்துக்கொண்டு வருமாறு அறிவுறுத்தலாகிறது.

14/9/18

பதிவாளர் (பொ)